සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/05/MF/02/01. | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2025.06.12 |
|---|---|---|---|---|---|

மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் நாயகம் / மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலாக்கம்.

**<u>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன இணைந்து 2013 ஆம் ஆண்டில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக செயற்படுத்திய ரட்டவிரு வீட்டுக் கடன் திட்டம்.</u>**

மேற்குறித்த கடன் திட்டத்தின் கீழ், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் தமது நிதியைப் பயன்படுத்தி வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் பரிந்துரைக்கப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் கடன் விண்ணப்ப படிவங்களுக்கு கடன்களை வழங்கியுள்ளது.

**02.** மேற்படி சமுர்த்தி வங்கிகளால் வழங்கப்பட்ட ரட்டவிரு வீட்டுக் கடன்களில் பெரும்பாலானவை அறவிட்டு முடிக்கப்பட்டிருந்தாலும் இணைப்பு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்படாத கடன்கள் இன்னும் அறவிடப்படாமல் உள்ளன.

**03**. 2025.05.27 ஆம் திகதி நடைபெற்ற பொது வியாபார நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற செயற்குழுக் கூட்டத்திலும் இக்கடன் திட்டம் தொடர்பாக வினவப்பட்டது.

**04**. எனவே இது தொடர்பாக 2025.06.04 ஆம் திகதி கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

**4.1.** உங்களது மாவட்டத்தில் செயற்படாத ரட்டவிரு வீட்டுக் கடனாளிகள் தொடர்பான தகவல்களை சேகரித்து பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்தது 2025.06.16 தொடக்கம் 2025.07.15 ஆம் திகதி வரை ஒரு மாத காலத்திற்குள் வீடு வீடாகச் சென்று ரட்டவிரு கடன்களை அறவீடு செய்ய ஒரு விசேட நடமாடும் சேவையை ஏற்பாடு செய்தல்.

4.1.1. மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், பிரதி/ உதவி பணிப்பாளர் அல்லது மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தின் சமுர்த்தி முகாமையாளர் (வங்கி / சமுதாய அடிப்படை அமைப்புகள் / சமூக அபிவிருத்தி/ கண்காணிப்பு விடயங்களுக்கான முகாமையாளர்கள் தவிர)

4.1.2. சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் / கருத்திட்ட முகாமையாளர்கள்.

4.1.3. பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்.

4.1.4. சம்பந்தப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் முகாமையாளர் / நுண்நிதி விடயத்துக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் / வலய உதவியாளர்.

1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 ... / 1st Step, 4 th floor, Sethsiripa...

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி (நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி)<br>Director (Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

4.1.5. உரிய கிராம சேவையாளர் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்.

4.1.6. உரிய சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் / செயலாளர்

**4.2.** அதற்கமைய இந்தக் குழு சமுர்த்தி வங்கி மட்டத்தில் செயற்படாத நிலையில் உள்ள ரட்டவிரு வீட்டுக் கடனாளிகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் இணக்கமாகப் பேச்சுவார்த்தை நடத்தி கடன் தொகை மற்றும் திருப்பிச் செலுத்தும் காலம் குறித்து ஒரு உடன்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

**4.3.** அதற்கமைய செயற்படாத கடன்களை அறவீடு செய்வதற்கான ஒரு செயற்பாட்டு திட்டமிடலை (Action Plan ) கிராம சேவையாளர் பிரிவு மட்டத்திலும், சமுர்த்தி வங்கிகள், வங்கிச் சங்கங்கள் மற்றும் மாவட்ட மட்டத்திலும் தயாரிக்கப்படல் வேண்டும்.

**4.4.** ரட்டவிரு வீட்டுக் கடன்களை அறவீடு செய்வதற்கான மாவட்டத் திட்டமிடலை 2025.07.21 ஆம் திகதிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தின் நுண் நிதிப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் விதிமுறைகளுக்கு அமைய செயற்படாத கடன்களின் தவணைப் பணத்தை அறவீடு செய்யும் பொறுப்பு பிரிவிற்குப் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

**05.** மேற்குறித்த தீர்மானங்களுக்கு அமைய உங்களது மாவட்டத்தில் அறவிடப்பட வேண்டியுள்ள ரட்டவிரு வீட்டுக் கடன்களை அறவீடு செய்தல் அதன் முன்னேற்றங்களை கண்காணித்தல் போன்றவற்றிக்கு உங்களது விசேட அவதானத்தினை செலுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**06.** இதற்கு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பை பெரிதும் பாராட்டுகிறேன்.

**சி. டி. களுஆராச்சி**
பணிப்பாளர் நாயகம்,

**பிரதிகள்**

01. செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - தகவலுக்காக.
02. பொது முகாமையாளர், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் - பிரதேச மட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக உத்தியோகத்தரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதற்கு.
03. அனைத்து மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - உ.ந.பொ
04. அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும், - தகவலுக்காகவும், உ.ந.பொ

Translate by :-
I. Aliyar
District Director ( Ret.)